(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 58.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2010, திசெம்பர் 03, வெள்ளிக்கிழமை, மு. ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0067/ '10

1.

கௌரவ சஜித் பிரேமதாஸ,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) இற்றைக்கு ஒரு வருடத்துக்கு முன்னர் கொங்கிறீட் இடப்பட்டு செப்பனிடப்பட்ட, அம்பாந்தோட்டை மாவட்டத்திற்குரிய, அங்குணுகொலபெலஸ்ஸ பிரதேச செயலாளர் பிரிவின், தலாவ கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள தலாவ சந்தி, தம்பரெல்ல வீதியில் 1கி.மீ. தூரம் வரை கொங்கிறீட் உடைத்து பாதை சேதமடைந்துள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வீதியை அபிவிருத்தி செய்வதற்காக ஒதுக்கப்பட்ட நிதித் தொகை எவ்வளவு என்பதையும்,

(ii) நிர்மாணப் பணிக்காக நிதி விடுவிக்கப்படுகின்ற போது, நியமங்களுக்கேற்ப வேலை பூர்த்தி செய்யப்பட்டுள்ளதென்ற விதப்புரை, தொழிநுட்ப உத்தியோகத்தரிடமிருந்து பெறப்பட்டுள்ளதா என்பதையும்,

(iii) மேற்படி வீதிக்கான கொடுப்பனவுகளின் போது விதப்புரைகள் பெற்றுக் கொள்ளப்பட்ட ஏனைய நிறுவனங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இது தொடர்பாக முறையான விசாரணையை நடத்துவதற்கும், குறிப்பிட்ட வீதியைச் சீர்செய்வதற்கும் அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0303/ '10

2.

கௌரவ தயாசிறி ஜயசேகர, — சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) 2008, 2009 ஆம் ஆண்டுகளில் மருந்து கொள்வனவுக்காக சுகாதார அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை எவ்வளவென்பதையும்,

(ii) அத்தொகையில் மேற்படி ஆண்டுகளுக்காக அமைச்சுக்கு கிடைக்கப்பெற்ற உண்மையான பணத்தொகை எவ்வளவென்பதையும்,

(iii) ஒவ்வொரு ஆண்டிலும் மருந்து கொள்வைனவுக்கு நியமிக்கப்பட்ட குழுவின் அங்கத்தவர்களின் பெயர்கள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) கடந்த காலங்களில் ஏற்பட்ட மருந்து பற்றாக்குறைக்கு காரணம் அதற்காக ஒதுக்கப்பட்ட நிதி போதைமையே என்பதனை அவர் ஏற்றுக்கொள்கின்றாரா?

(இ) இன்றேல், ஏன்?

0321/ ‘10

3.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கடந்த காலங்களில் நடைபெற்றவற்றைப் பற்றி விசாரிப்பதற்கான மீளிணக்கக் குழு அல்லது ஆணைக்குழு நியமிக்கப்பட்ட திகதியையும்,

(ii) மேற்படி ஆணைக்குழு அல்லது மீளிணக்கக் குழுவின் உறுப்பினர்களது பெயர்களையும்,

(iii) மேற்குறிப்பிடப்பட்ட ஆணைக்குழு அல்லது மீளிணக்கக் குழுவின் அறிக்கை எதிர்பார்க்கப்படும் திகதியையும்,

(iv) இற்றைவரை மேற்படி ஆணைக்குழு அல்லது மீளிணக்கக் குழு நடத்திய அமர்வுகளின் எண்ணிக்கையையும்,

(v) மேற்படி ஆணைக்குழு அல்லது மீளிணக்கக் குழுவின் தொழிற்பாட்டிற்காக ஒதுக்கப்பட்ட பணத்தொகையையும்,

(vi) ஒதுக்கப்பட்ட பணம் போதுமானதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0698/ ’10

4.

கௌரவ புத்திக பத்திரண,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) தற்போது இலங்கையிலுள்ள கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் எண்ணிக்கை யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) கிராம உத்தியோகத்தர் பதவிகளில் வெற்றிடங்கள் நிலவும் பிரிவுகளில் பதில் கடமையாற்றும் கிராம உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்படும் கொடுப்பனவானது, அவர்களது முதல் நியமனத்தின் போது பெற்றுக்கொண்ட அடிப்படைச் சம்பளத்தின் 1/4 பகுதியாகும் என்பதையும்,

(ii) இந்த அடிப்படையில் பதில் கடமையாற்றும் கொடுப்பனவு செலுத்தப்படுவதன் காரணமாக 10 - 15 வருடங்களுக்கு முன்னர் நியமனம் பெற்ற உத்தியோகத்தர்களுக்கு கிடைக்கும் மேற்படி கொடுப்பனவு மிகச் சொற்பமாதொரு பணத்தொகையாகும் என்பதனால், அவ்வாறான உத்தியோகத்தர்களுக்கு நிதி ரீதியில் அநீதி இழைக்கப்படுகின்றது என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) (i) அவ்வாறான உத்தியோகத்தர்களுக்கு நியாயம் கிடைக்கக் கூடிய வகையில் அவர் நடவடிக்கையெடுப்பாரா என்பதையும்,

(ii) அவ்வாறாயின், அது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும் திகதி எதுவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0226/ '10

5.

கௌரவ சஜித் பிரேமதாஸ,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அம்பாந்தோட்டை மாவட்டத்தில் அம்பந்தோட்டை வலயக் கல்விக் காரியாலயத்திற்குட்பட்ட அம்பலாந்தோட்டை கோட்டக் கல்விக் காரியாலயத்தினால் பரிபாலிக்கப்படும் அரசாங்கப் பாடசாலைளின் எண்ணிக்கை என்னவென்பதையும்,

(ii) அப்பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்,

(iii) மேற்படி பாடசாலைகளில் தற்போது மூடப்பட்டுள்ள அல்லது மூடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(iv) அப்பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இக்கோட்டத்திற்குரிய பாடசாலைகளில் மிகையான ஆசிரியர்கள் உள்ளனரா என்பதையும்,

(ii) அவ்வாறான பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்,

(iii) ஆசிரியர்கள் பற்றாக்குறை நிலவும் பாடசாலைகளின் பெயர்கள் யாவை என்பதையும்,

(iv) பற்றாக்குறை நிலவுவது எந்தப் பாடங்களுக்கு என்பதையும்,

(v) இவ்வாறு ஆசிரியர் பற்றாக்குறை நிலவும் பாடசாலைகளுக்கு ஆசிரியர்களைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(vi) அவ்வாறாயின் அது எவ்வளவு காலத்தினுள் நடைபெறுமென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0323/ '10

6.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) அரசாங்கம் "மத்தட்ட தித்த" நிகழ்ச்சித் திட்டத்தை அங்கீகரித்த திகதியை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) கடந்த பத்து வருடங்களாக இற்றைவரை வருடவாரியாக,

(i) பியர் மற்றும் வன்மதுபானம் ஆகியவற்றின் பாவனையை வெவ்வேறாகவும்,

(ii) இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட பியர் மற்றும் வன்மதுபானம் ஆகியவற்றின் அளவையும்,

(iii) இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட பியர் மற்றும் வன்மதுபானம் ஆகியவற்றின் அளவையும்,

(iv) பியர், வன்மதுபானம் ஆகியவற்றின் உள்ளூர் உற்பத்தி மற்றும் இறக்குமதி மீது விதிக்கப்பட்ட சகல விதமான வரிகள் மூலம் அரசாங்கம் பெற்றுக் கொண்ட வருமானத்தையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) கடந்த மூன்று வருடங்களாக கள்ளத்தனமாக சட்டரீதியற்ற முறையில் உற்பத்தி செய்யப்படும் மதுபானத்தின் மதிப்பிடப்பட்ட அளவை வருடவாரியாக அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0699/ '10

7.

கௌரவ புத்திக பத்திரண,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கை போக்குவரத்துச் சபையின் தென்மாகாணத்திற்குரிய டிப்போக்களில் 2005 தொடக்கம் இதுவரை ஓய்வுபெற்ற ஊழியர்களுக்கு ஓய்வூதிய பணிக்கொடை செலுத்தப்படவில்லை என்பதை அவர் ஏற்றுக்கொள்வரா?

(ஆ) (i) அவ்வாறு செலுத்தப்படவுள்ள மொத்தப் பணிக்கொடைப் பணத்தொகை எவ்வளவென்பதையும்,

(ii) ஓய்வு பெற்றதன் பின்னர் மேற்படி ஊழியர்களுக்குரிய பணிக்கொடை செலுத்தப்படவேண்டிய கால எல்லை எவ்வளவென்பதையும்,

(iii) 2005 தொடக்கம் ஓய்வுபெற்ற ஊழியர்களில் இதுவரை பணிக்கொடை செலுத்தப்பட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்.

(iv) பணிக்கொடை இதுவரை செலுத்தப்படாத ஓய்வுபெற்றவர்களுக்கு அப்பணம் செலுத்தப்படும் திகதி எது என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், என்?

0730/ '10

8.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பண்டுவஸ்நுவர மேற்கு பிரதேச செயலாளர் பிரிவின் பத்திரணவத்த வீதி எந்த நிறுவனத்திற்கு உரித்தாகின்றது என்பதையும் ,

(ii) மேற்படி வீதிக்கு தார் இடுவதற்காக உரிய நிறுவனத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி வீதிக்கு தார் இடுவதற்காக ஒப்படைக்கப்பட்ட நிறுவனம் அல்லது நபர்கள் யாரென்பதையும்,

(ii) அதற்காக ஒதுக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை எவ்வளவென்பதையும்,

(iii) குறித்த மதிப்பீட்டுக்கமைய தாரிட வேண்டிய தூரத்தின் அளவும் வீதியின் அகலமும் எவ்வளவென்பதையும்,

(iv) தற்போது தாரிடப்பட்டுள்ள தூரத்தின் அளவு எவ்வளவென்பதையும்,

(v) தாரிட்டு முடித்த திகதி யாது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) மேற்படி வீதிக்கு தாரிடுதல் தரநியமங்களுக்கமைய நடைபெறவில்லை என்பதையும், தற்போது பெரும்பாலான இடங்கள் ஆழ்துள்ளன என்பதையும், உரிய தூரத்திற்கு தாரிடப்படவில்லை என்பதையும் அவர் அறிவாரா?

(ஈ) ஆமெனின், தரநியமங்களுக்கு இணங்கியொழுகாத வகையில் நிர்மாணிப்பை மேற்கொண்ட நிறுவனம் அல்லது நபர்கள் தொடர்பில் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*அ1.

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2011) — (ஒதுக்கப்பட்ட பத்தாம் நாள்) — குழு ஆய்நிலை (பரீசீலனை, திசெம்பர் 02)

* 2.

தொழில்நுட்பவியல், ஆராய்ச்சி அமைச்சர்,— இலங்கைக் கட்டளைகள் நிறுவனத்தின் ஆண்டறிக்கை – 2007,— 1984 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க இலங்கைக் கட்டளைகள் நிறுவனச் சட்டத்திற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் 2009.09.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2007 ஜனவரி 01 ஆம் திகதி முதல் 2007 டிசம்பர் 31 ஆம் திகதி வரை முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான இலங்கை கட்டளைகள் நிறுவனத்தின் ஆண்டறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(விஞ்ஞான, தொழில்நுட்பவியல் பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2009.08.06 ஆம் திகதி பரிசீலிக்கப்பட்டது)

* 3.

தொழில்நுட்பவியல், ஆராய்ச்சி அமைச்சர்,— கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தின் ஆண்டறிக்கை - 2006,— 1994 ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க விஞ்ஞான, தொழில்நுட்பவியல் அபிவிருத்தி சட்டத்தின் 40 (3) ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) பிரிவிற்கமையவும் 2009.08.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2006 ஜனவரி 01 ஆம் திகதி முதல் 2006 டிசம்பர் 31 ஆம் திகதி வரை முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான கைத்தொழில் தொழில்நுட்பவியல் நிறுவனத்தின் ஆண்டறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(விஞ்ஞான, தொழில்நுட்பவியல் பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2009.08.06 ஆம் திகதி பரிசீலிக்கப்பட்டது)

* 4.

தொழில்நுட்பவியல், ஆராய்ச்சி அமைச்சர்,— ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான இலங்கைத் தராதர அங்கீகாரச் சபையின் ஆண்டறிக்கை – 2006,— 2005ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான இலங்கைத் தராதர அங்கீகாரச் சபைச் சட்டத்தின் 29 (5) பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) பிரிவிற்கமையவும் 2009.09.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2006 ஜனவரி 01 ஆம் திகதி முதல் 2006 டிசம்பர் 31 ஆம் திகதி வரை முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான இலங்கைத் தராதர அங்கீகாரச் சபையின் ஆண்டறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(விஞ்ஞான, தொழில்நுட்பவியல் பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2009.08.06 ஆம் திகதி பரிசீலிக்கப்பட்டது)

* 5.

சுகாதார அமைச்சர்,— இலங்கை அரச மருந்தாக்கட் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத் தாபனத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும்— 2007,— 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2) பிரிவிற்கமையவும் 1971ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) பிரிவிற்கமையவும் 2009.07.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2007.12.31 ஆம் திகதி முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான இலங்கை அரச மருந்தாக்கட் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத் தாபனத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(சுகாதார நலத்துறை, போசணை பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2009.05.05 ஆம் திகதி பரிசீலிக்கப்பட்டது)

* 6.

சுகாதார அமைச்சர்,— விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த மருத்துவமனை வருடாந்த அறிக்கையும் கணக்குகளும்—2007,— 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2) பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) பிரிவிற்கமையவும் 2009.07.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2007.12.31 ஆம் திகதி முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த மருத்துவமனை வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(சுகாதார நலத்துறை, போசணை பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2009.05.05 ஆம் திகதி பரிசீலிக்கப்பட்டது)

* 7.

சுகாதார அமைச்சர்,— ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும்—2006,— 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2) ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் 2009.07.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2006.12.31 ஆம் திகதி முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(சுகாதார நலத்துறை, போசணை பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2009.05.05 ஆம் திகதி பரிசீலிக்கப்பட்டது)

* 8.

தொழில், தொழில் உறவுகள் அமைச்சர்,— பெண்கள், இளைஞர்கள் மற்றும் சிறுவர்களை தொழிலுக்கமர்த்துதல் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள்,— 1956 ஆம் அண்டின் 47 ஆம் இலக்க, பெண்கள், இளைஞர்கள் மற்றும் சிறுவர்களை தொழிலுக்கமர்த்துதல் சட்டத்தின் 20அ ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 31 ஆம் பிரிவின் கீழ், அச்சட்டத்தின் 20அ ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட வழிகாட்டு நெறிகளுக்கிணங்க, தொழில் உறவுகள், விளைவுப்பெருக்க மேம்பாட்டு அமைச்சரால் ஆக்கப்பட்டதும், 2010, ஓகத்து மாதம் 20 ஆம் திகதி 1667/41 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும், 2010.11.09ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்கு விதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 9.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— நில அளவைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்,— 2002 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க நில அளவைச் சட்டத்தின் 41 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 65 ஆம் பிரிவின் கீழ், காணி அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டு 2005 நவம்பர் மாதம் 23ஆம் திகதிய 1420/20 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட "நில அளவைச் சபை—2005 (வருடாந்த தொழில் புரியும் உத்தரவுப்பத்திரங்கள்)" பிரமாணங்களின் 3 ஆம் பந்தியை திருத்துவதற்காக 2009, திசெம்பர் மாதம் 18 ஆம் திகதிய 1633 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2010.10.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

* 10.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள், — 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 11.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— நில அளவைச் சட்டத்தின் கீழான அறிவித்தல்,— 2002 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, நில அளவைச் சட்டத்தின் 39ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 65ஆம் பிரிவின் கீழ், காணி, காணி அபிவிருத்தி, குடியிருப்பு மற்றும் போர் வீரர் நலனோம்புகை அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டு 2005, நவெம்பர் மாதம் 23 ஆம் திகதிய 1420/20 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட "2005 நில அளவைச் சபை (பதிவு) பிரமாணத்தின்" 2(2) ஆம் பந்தியை திருத்துவதற்காக 2010, ஏப்பிரல் மாதம் 12 ஆம் திகதிய 1649/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும், 2010.11.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

* 12.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம்,— 2008 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவினால், நிதி, திட்டமிடல் அமைச்சருக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், பதில் நிதி, திட்டமிடல் அமைச்சரால் செய்யப்பட்ட கட்டளை இல.27 இல் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2008 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 27

2008 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் பதில் நிதி, திட்டமிடல் அமைச்சர் சரத் அமுனுகம ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக்கட்டளை மூலம் அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 21302 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "அச்சிடல், பிரசாரம் மற்றும் புத்தகங்கள் விற்பனை முற்பணக் கணக்கு - கல்வி வெளியீட்டுத் திணைக்களம்" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்:-

(i) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(ii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக் குறைந்த எல்லை — ரூபா 2,400,000,000 இலிருந்து ரூபா 2,162,000,000 வரை.

(iii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(iv) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை — ரூபா 100,000,000 இலிருந்து ரூபா 960,000,000 வரை.

(இக்கட்டளை 2009.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம் : கலாநிதி சரத் அமுனுகம*
பதில் நிதி, திட்டமிடல் அமைச்சர்.

கொழும்பு 01,
2010.07.03

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 13.

வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 14.

காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 15.

உள்ளூர் அதிகாரசபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 16.

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 17.

தீங்கு விளைவிக்கும் ஆயுதங்கள் (திருத்தம்) சட்ட மூலம் - இரண்டாம் மதிப்பீடு.

* 18.

மத்தியஸ்த்த சபைகள் (திருத்தம்) சட்டமூலம் - இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

## தினப்பணிகள் மீதான திருத்தங்கள் பற்றிய முன்னறிவித்தல்

அ1.

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2011) என்னும் சட்டமூலத்திற்குக் குழு ஆய்நிலையில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் திருத்தங்களளைத் "தினப்பணிக்கான அனுபந்தம்" என்னும் தனியிதழிற் காண்க.